5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1990. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்)

மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1990) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."